<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.I, Mettur**</u>

**Case No : C.C. No. 95/2022**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 12.12.2023**

| | |
|---|---|
| **Name : Dr. ராதாகிருஷ்ணன்** | **Caste : MBC** |
| **Father Name: p. மகாலிங்கம்** | **Calling : முதல்நிலை உதவி மருத்துவர்** |
| **Village : மேச்சேரி** | **Religion : இந்து** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 42** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் தற்போது மேட்டூர் தலைமை மருத்துவமனையில் முதல்நிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 22.03.2022 அன்று பணி மருத்துவராக பணிபுரிந்த போது மதியம் 3.05 மணியளவில் ரவிக்குமார் என்பவரை சந்தோஷ் மற்றும் சதிஷ் ஆகியோர் சிகிச்சைக்காக அழைத்து வந்தனர். அவரை விசாரிக்க தன்னை மூன்று தெரிந்த ஆண் நபர் 20.03.2022 இரவு 9.30 மணியளவில் தன்னை கல்லால் மற்றும் காலால் எட்டி உதைத்ததாகவும், வீட்டின் அருகில் உள்ள வீரக்கல் பைப்பாஸ் அருகே தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது

**1. இரண்டு கண்களிலும் இரத்தகசிவு ஏற்பட்டிருந்தது.**

**2. வலது பக்க மண்டையில் சுமார் 1 x 0.5 CM அளவில் வெட்டிய காயம் காணப்பட்டது.**

**3. வலது பக்க நெஞ்சில் வலி இருப்பதாக கூறினார்.**

அவரை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுக்க பரிந்துரை செய்தேன். காயம்பட்ட நபர் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை எடுத்துக்கொண்டார். அவருக்கு சிகிச்சை அளித்த சேலம் அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் சிவா வாதிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்தார். அதனடிப்படையில்

அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என நான் சான்றளித்தேன். மேட்டுர்அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் **அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மற்றும் காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) இந்த காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அடிப்பட்ட நபர் என்னிடம் சிகிச்சைக்கு சேர்ந்தபோது என்னை 3 நபர்கள் அடித்ததாக சொன்னார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து தான் வாதி சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். வாதி சிகிச்சைக்கு வரும் போது அவருடன் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் சந்தோஷ் மற்றும் சதிஷ் ஆகிய இரண்டு நபர்கள் வந்தனர். மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தபோது ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். எத்தனை நாட்கள் கழித்து சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் உடனே அனுப்பி வைக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் எப்போது ஏற்பட்டது என்று உறுதியாக சொல்ல முடியாது என்றால் இரண்டு முதல் 3 நாட்கள் இருக்கலாம். எப்பொழுது என்று உறுதியாக கூற முடியாது. அவர் சிகிச்சைக்கு வரும்போது சாதாரணமாக தான் வந்தாரா என்றால் ஆமாம். சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் சிவா கொடுத்த அறிக்கையின் பேரிலேயே நான் கொடுங்காயம் என சான்றளித்தேன் என்றால் சரிதான். ஒரு நபர் குடிபோதையில் நடந்து செல்லும் போது கல்லின் மீது விழுந்து மேற்கண்ட காயம் ஏற்படும் என்றால் சரிதான். வாதி என்னிடம் வருவதற்கு முன்பு சிகிச்சை எடுத்ததற்கான தடயம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

என்னிடம் சிகிச்சைக்காக வந்தபோது அ.சா.1 குடிப்போதையில்

இருந்ததற்கான எவ்வித அறிகுறியும் இல்லை.

**குறுக்கு விசாரணை**

சாதாரணமாக ஒரு நபர் குடித்திருந்தால் 8 முதல் 12 மணி நேரத்திற்குள் தான் அவர் குடித்திருப்பது தெரிய வரும் என்றால் அவர் குடித்திருக்கும் அளவை பொறுத்து மாறுபடும்.

**விசாரணை முடிக்கப்பட்டது**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**